## 67

# நீங்கள் வளரும்போது என்னவாகப் போகின்றீர்கள்?

## மத். 20:17-28; மாற். 10:32-45; லூக். 18:31-34, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*எனது தந்தையான டேவிட் H. ரோப்பர் அவர்கள் தமது வயது வந்த காலத்தில் பெரும்பகுதி ஒரு கல்வியாளராக இருந்துள்ளார்: அவர் ஒரு விவசாயப் பயிற்சி ஆசிரியராக, ஒரு அறிவியல் ஆசிரியராக, மற்றும் ஒரு முதல்வராகப் பணியாற்றியுள்ளார். இருப்பினும், அவர் ஒரு புத்தகக் கடையின் உரிமையாளராகவும், ஒரு விவசாயியாகவும், ஒரு சுவிசேஷ ஊழியக்காரராகவும் மற்றும் ஒரு பிரசங்கியாராகவும் இருந்துள்ளார். இன்றைய நாட்களில் அவர் தமது 88 வயதில், செய்தித்தாள்களுக்கு நகைச்சுவை/இன்பமும் துன்பமும் கலந்த கடந்த கால நினைவுகளைப் பற்றிய பத்தியை எழுதுகின்றார். அவரது வாழ்க்கையின் வரலாறு "நான் வளரும்போது என்னவாகப் போகின்றேன்?" என்று தலைப்பிடப்பட வேண்டும் என்று குடும்பத்தின் உறுப்பினர்கள் நகைச்சுவையாகக் கூறுவதுண்டு.*

*"நீ வளரும்போது என்னவாகப் போகின்றாய்?" என்று ஒரு சிறு பிள்ளையைக் கேட்டுப் பாருங்கள், அநேகமாக அதற்கு அவன் அல்லது அவள் ஒரு தயார் நிலைப் பதிலைக் கொண்டிருக்கலாம்: "ஒரு தீயணைக்கும் வீரனாவேன்," "ஒரு ஆசிரியராவேன்," "ஒரு விண்வெளி வீரனாவேன்," "ஒரு நடனக்கூட்டத்தின் நாயகியாவேன்," "ஒரு மருத்துவராவேன்," "ஒரு செவிலிப் பெண்ணாவேன்."[1] அந்தக் கேள்வியை நான் உங்களிடத்தில் கேட்க விரும்புகின்றேன்: "நீங்கள் வளரும்போது என்னவாகப் போகின்றீர்கள்?" இல்லை, நீங்கள் உடல்ரீதியாக வளரும்போது இருக்கும் நிலையைப் பற்றி நான் கேட்கவில்லை. நீங்கள் அநேகமாக ஏற்கனவே தேர்ந்துகொண்ட ஒரு தொழிலைக் கொண்டிருக்கலாம். மாறாக, நீங்கள் ஆவிக்குரிய[2] வகையில் வளரும்போது என்னவாகலாம் என்பது பற்றி நீங்கள் கொண்டிருக்கும் திட்டங்களைப் பற்றி நான் என் மனதில் கருத்துக் கொண்டுள்ளேன். உங்கள் ஆவிக்குரிய பேரார்வங்கள் என்னவாக உள்ளன? ராஜ்யத்தில் நீங்கள் என்னவாக ஆகலாம் என்று விரும்புகின்றீர்கள்?*

*இந்தப் பாடக் கருத்துப் பற்றி ஒருநாள் இயேசு, தமது சீஷர்களுடன் தீவிரமான உரையாடல் ஒன்றைக் கொண்டிருந்தார். அவர் கூறுவதற்கு*

*எவைகளைக் கொண்டிருந்தார் என்பது பற்றி நாம் நினைத்துப் பார்க்க வேண்டியது அவசியமாக உள்ளது.*

## இரண்டு சீஷர்கள்
## *(மத். 20:17-23; மாற். 10:32-40; லூக். 18:31-34)*

*கர்த்தர் தமது மரணத்தை நோக்கிச் செல்லும் வழியில் இருந்தார். அவர் தமது சீஷர்களைத் தம்மைச் சுற்றி ஒன்றுகூட்டி, பின்வருமாறு கூறினார்:*

> *இதோ, எருசலேமுக்குப் போகிறோம், மனுஷகுமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைகளெல்லாம் நிறைவேறும். எப்படியெனில், அவர் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பரியாசமும் நிந்தையும் அடைந்து, துப்பப்படுவார். அவரை வாரினால் அடித்து, கொலைசெய்வார்கள்; மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் (லூக். 18:31-33).*

*லூக்கா 18:34அ-வின்படி, "இவைகளில் ஒன்றையும் அவர்கள் [சீஷர்கள்] உணரவில்லை." கிறிஸ்து ஒரு உலகப்பிரகாரமான ராஜ்யத்தை அமைப்பதற்காக எருசலேமுக்குச் சென்று கொண்டிருந்தார் என்று அவர்கள் நினைத்தபடியால், இதைப் புரிந்துகொள்ளத் தவறினார்கள் (லூக். 19:11ஐக் காணவும்). சிலுவை மரணம் என்பது அவர்களின் திட்டங்களுக்குள் பொருந்தி வரவில்லை.*

### *சுயத்தின்மீது ஆர்வம்*

*அவர்களின் தவறான புரிந்துகொள்ளுதலின் விரிவளவானது விரைவிலேயே உறுதியாயிற்று: "அப்பொழுது, செபெதேயுவின் குமாரராகிய, யாக்கோபும் யோவானும் அவரிடத்தில் வந்து; 'போதகரே, நாங்கள் கேட்டுக்கொள்ளப் போகிறதை நீர் எங்களுக்குச் செய்யவேண்டுமென்று விரும்புகிறோம்' என்றார்கள்" (மாற். 10:35). யாக்கோபும் யோவானும், தங்களுக்குக் கிறிஸ்து, "நீங்கள் எதை விரும்பினாலும் அதைக் கொடுப்பேன்" என்று கூறவேண்டுமென்றே உண்மையில் விரும்பினார்கள். யாரேனும் ஒருவர் தாம் எதை விரும்புகின்றார் என்பதைக் கூறாமலேயே உங்களிடம் உதவி கேட்டிருக்கும் ஒரு அனுபவத்தை நீங்கள் கொண்டிருக்கலாம்.[3]*

> *வேண்டுகோள்: "டேவ், நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?"*
> *முன்னெச்சரிக்கையான பதில்: "ஓ ... அது என்ன?"*

*இவ்விரு மனிதர்களிடத்தில் இயேசு, "நான் உங்களுக்கு என்னசெய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்கள்?" என்று கேட்டார் (மாற். 10:36). அவர்கள் எதை விரும்பினார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார், ஆனாலும் அவர்களின் சுயமையமான தன்மையை வெளிப்படுத்த விரும்பினார் (யோவா. 6:6 உடன் ஒப்பிடவும்). அவர்கள், "உமது மகிமையிலே, [அதாவது: "உமது ராஜ்யத்திலே"; மத். 20:21], எங்களில் ஒருவன் உமது வலது*

பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எங்களுக்கு அருள்செய்யவேண்டும்” என்று பதில் கூறினார்கள் (மாற். 10:37).

சற்றே முன்பு கிறிஸ்து, தமது அப்போஸ்தலர்கள் தமது ராஜ்யத்தில் பன்னிரெண்டு சிங்காசனங்களில் அமருவார்கள் என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார் (மத். 19:28).[4] இப்போது யாக்கோபும் யோவானும் அந்தச் சிங்காசனங்களில் மிகவும் மேன்மையானவற்றைக் கேட்டார்கள். அவர்கள், பன்னிரண்டு சிங்காசனங்களில் மிகவும் முக்கியமானவைகள் இயேசுவின் வலது புறத்தில் இருக்குமென்றும், அதற்கு அடுத்த முக்கியமானவைகள் அவருடைய இடது புறத்தில் இருக்கும் என்றும் யூகித்துக் கொண்டார்கள்.[5] அமெரிக்காவில் நாங்கள், அவர்களில் ஒருவர் ராஜ்யத்தின் செயலாளராக வும் இன்னொருவர் கருவூலத்தின் செயலாளராகவும் இருக்க விரும்பினார் கள் என்று கூறுவதுண்டு.[6] இங்கிலாந்தில் நாம் இந்த ஒப்புவமையை பிரதம மந்திரி மற்றும் நிதிப் பாதுகாப்புத் துறையின் வேந்தர் என்று மாற்றலாம்.[7]

இவர்கள் ஏன் இந்த வேண்டுகோளை விடுத்தார்கள் என்பது பற்றியோ அல்லது இயேசு இதை மதிப்பார் என்று ஏன் நினைத்தார்கள் என்பது பற்றியோ நாம் அறிவதில்லை. ஒருவேளை அவர்கள், இந்தப் பதவிகளுக்குத் தாங்களே மிகச் சிறந்த வகையில் தகுதி வாய்ந்தவர்கள் என்று நினைத்திருக்கலாம்: அவர்களின் குடும்பத்தில் பணம் இருந்தது (மாற். 1:20), மற்றும் அவர்கள் பிரதான ஆசாரியருடன் தொடர்பு வைத்திருந்தார்கள் (யோவா. 18:15). ஒருவேளை அவர்கள், கர்த்தரின் “உள்வட்டத்திற்குள்” தாங்கள் இருந்த உண்மையை எண்ணியிருக்கலாம் (மத். 17:1). இவர்கள் இயேசுவின் இனத்தார்களாக இருந்து, அவர் தங்கள்மீது பட்சமாயிருப்பார் என்று நினைத்திருக்கவும் சாத்தியக்கூறு உள்ளது. அவர்களின் நியாயவாதம் எதுவாக இருப்பினும், கிறிஸ்து சிலுவையைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கையில், அவர்கள் கிரீடங்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

டேல் ஹார்ட்மேன் அவர்கள் தமது இளம்பருவத்தில் நடந்த நிகழ்ச்சி யொன்றைக் கொண்டு இந்த சீஷர்களின் ஒழுங்கமைவற்ற தன்மையை விவரித்தார். ஒரு சிறு குளத்தை அதன் மண் அணையைப் பழுது நீக்குவதற் காக அதிலிருந்து தண்ணீரை வெளியேற்ற வேண்டியிருந்தது. அதில் பாஸ் என்ற வகையான கடல்மீன்கள் இருந்தன என்று டேல் கேள்விப்பட்டிருந் தார், எனவே அவரும் ஒரு நண்பரும், அதிலிருந்து தண்ணீர் வெளியேற்றப் படும்முன்பு அதிலிருந்த மீன்களைப் பிடிக்க முடிவு செய்தார்கள்: அவர்கள் ஒரு நீண்ட வலையைத் தங்களுக்கு நடுவில் இழுத்துப் பிடித்துக்கொண்டு அதை அந்தச் சிறு குளத்தினூடே இழுத்துச் சென்றார்கள். வலையானது கனக்கத் தொடங்கிற்று - அதை டேல்லினால் மிக சிரமமாகவே இழுக்கு மளவுக்கு அது கனக்கத் தொடங்கிற்று. அது பாஸ் என்ற வகையான மீன்களினால் நிறைந்திருக்க வேண்டும்! அவர்கள் மறுபுறத்தை அடைந்து, வலையைத் தண்ணீரில் இருந்து வெளியே இழுத்தபோது, அதில் ஒரு சில மீன்கள் இருந்தன; ஆனால் அதில் பெரும்பாலும் சிறு சிறு ஆமைகளே இருந்தன, அவைகள் ஒவ்வொன்றும் குளத்தின் ஆழமான பகுதிக்குத் திரும்பி நீந்திச் செல்ல தனது முழுபலத்துடன் முயற்சி செய்து

கொண்டிருந்தன. "இயேசு சிலுவையை நோக்கி முன்செல்லுகையில், அவர் அதற்கு நேரெதிரே செல்ல முயற்சி செய்துகொண்டிருந்த பன்னிரெண்டு ஆமைகள் தம்மைச் சூழ்ந்திருக்கக் கண்டார்" என்று டேல் முடித்தார்.[8]

இயேசுவுடன் பயணம் செய்தவர்களில் யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரின் தாயாகிய சலோமியும் இருந்தார் (மத். 20:20; மத். 27:55, 56; மாற். 15:40, 41ஐக் காணவும்). இந்தப் பெண்மணி தமது மகன்களுடன் வந்து, தனது வேண்டுகோளையும் கூடுதலாகக் கூறினார்: "உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டு பேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள்செய்யவேண்டும்" (மத். 20:21).[9]

திருமதி. செபெதேயுவைப் புரிந்துகொள்ளுவதில் எனக்கு இடர்ப்பாடு எதுவும் இல்லை. இரு மகன்களைக் கொண்ட ஒரு தாயார் எனக்கு இருக்கின்றார், அவர் தமது பையன்களுக்கு உதவுவதற்குச் சட்டப்பூர்வ மான, ஒழுக்கரீதியான மற்றும் அறநெறிப்படியான எதை வேண்டுமானா லும் செய்வார். இவர் அமெரிக்க அதிபரிடத்தில் சென்று, ''அதிபர் அவர்களே, உங்களிடம் ஒரு உதவி கேட்டு வந்துள்ளேன். எனக்கு இரண்டு பையன்கள் இருக்கின்றார்கள் - இவர்கள் மாபெரும் பையன்கள் - இவர்களுக்கு நீங்கள் ... செய்ய வேண்டும்" என்று கேட்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது.

கிறிஸ்து சலோமியைக் கடிந்துகொள்ளவில்லை. அவள் தனது மகன்களைக் குறித்துப் பெருமை கொண்டிருந்தாள் மற்றும் அவர்களுக்கு மிகச் சிறந்தவற்றை விரும்பினாள். ராஜ்யமானது உலகப்பிரகாரமானது என்பதற்குப் பதிலாக ராஜ்யமானது ஆவிக்குரியதாகும் என்பதை இவள் புரிந்துகொண்டிருக்கவில்லை, இதை விளங்கிக் கொள்ள முடியும்.[10] ஆயினும் இவளது மகன்கள் சாக்குப்போக்குக் கூறமுடியாத நிலையில் இருந்தார்கள். அவர்கள் மூன்றாண்டு காலமாக இரவும் பகலும் இயேசு கூறியவற்றைக் கவனிக்கும் வாய்ப்பளிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் ராஜ்யத்தின் இயல்பைப் புரிந்துகொண்டிருக்க வேண்டும். இவ்விதமாக, யாக்கோபுவையும் யோவானையும் கர்த்தர் கடிந்துகொண்டார் (மத். 20:22; மாற். 10:38ஐ காணவும்).[11]

**சுயத்தை மறுத்தல்**

முதலில் கிறிஸ்து அவர்களிடம், ''நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்கே தெரியவில்லை'' என்று கூறினார் (மாற். 10:38அ). அது அவர்களைத் திகைப்பில் ஆழ்த்தியிருக்கலாம். அவர்கள், தாங்கள் கேட்டது இன்னது என்பதை அறிந்திருந்ததாக நினைத்தார்கள் என்பது உறுதி: அவர்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் கேட்டார்கள். அவர்கள் கௌரவத்தையும் மேன்மையையும் கேட்டார்கள். அவர்கள் மதிப்பையும் கனத்தையும் கேட்டார்கள்.

இயேசுவின் கூற்று அவர்களைத் திகைப்படையச் செய்தது என்றால், அவர் அடுத்துக் கேட்ட கேள்வியால் அவர்கள் இரு மடங்கு திகைப்படைந் தார்கள்: "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும்

ஸ்நானத்தை நீங்கள் பெறவும், உங்களால் கூடுமா?'' (மாற். 10:38ஆ). "பாத்திரம்'' என்பது பொங்கிப் பெருகும் மகிழ்ச்சி (சங். 23:5) மற்றும் அழிவை ஏற்படுத்தும் துன்பம்[12] (ஏசா. 51:17) ஆகிய இரண்டிற்குமான பழைய ஏற்பாட்டு அடையாளமாக இருந்தது; இவ்விடத்தில் இது, கிறிஸ்துவுக்கு ஏற்படவிருந்த பாடுகளைக் கண்ணோக்கியது.[13] "ஸ்நானம்'' என்ற வார்த்தை ''முழுக்காட்டப்படுதல்'' என்று அர்த்தப்படுகிறது மற்றும் உவமான வகையில் மூழ்கடிக்கப்படுதலைக் குறிக்கப் பயன்படுத்தப்பட முடியும்.[14] சிலுவை வரையிலும் மற்றும் சிலுவை உள்ளிட, இயேசுவின் துன்பம் அவரது வார்த்தைகளில் ஆழ்ந்த சிந்தனையைக் கொண்டிருந்தது. துன்பத்தின் பாத்திரம் மற்றும் ஸ்நானம் ஆகியவற்றைக் குறிப்பிடுவதற்கு இயேசு நிகழ் கால வினைச் சொல்லைப் பயன்படுத்தினார்: "நான் குடிக்கும் ... நான் பெறும்.'' எதிர்கொண்டிருந்தது என்ன என்பதைக் குறித்துப் பூரணமாக அறிந்திருந்த நிலையில், அவர் ஏற்கனவே வேதனையினால் நிறைந்திருந்தார் (லூக். 12:50ஐக் காணவும்).

ரோம ராணுவத்துடன்[15] ஏற்படப்போவதாகக் கற்பனை செய்யப்பட்ட சில மோதல்களைச் சகித்துக் கொள்ளுதல் பற்றி இயேசு கூறியதாக யாக்கோபுவும், யோவானும் நினைத்திருக்கலாம் - மற்றும் அவர்கள் தங்களை தைரியத்தில் குறைவுள்ளவர்கள் என்று கருதவில்லை.[16] தங்களின் அறியாமையில், தன்னம்பிக்கையுள்ளவர்களாய், அவர்கள் ''கூடும்'' என்றார்கள் (மாற். 10:39அ).[17]

இயேசு, "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்'' (மாற். 10:39ஆ) என்று பதில் கூறியபோது, அவரது குரலில் வருத்தம் தோய்ந்திருக்க வேண்டும். இவ்விரு மனிதர்களுக்கும் காத்திருந்தது என்ன என்பதைக் கிறிஸ்து அறிந்திருந்தார்: யாக்கோபு, கி.பி. 44ல் ஏரோது அகிரிப்பாவின் கைகளில் மரிப்பார் (அப். 12:2), மற்றும் யோவான் பத்மு தீவிக்கு நாடுகடத்தப்படுவார் (வெளி. 1:9).

பின்பு இயேசு அவர்களின் வேண்டுகோளுக்குக் குறிப்பாகப் பதிலுரைத்தார்: "... என் வலது பாரிசத்திலும், என் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல'' (மத். 20:23). இப்படிப்பட்ட கனத்திற்குரியவற்றை அருளுதல் என்பது தெய்வீக முன்னுரிமைகளில் ஒன்றாக உள்ளது, தாம் பூமிக்கு வந்தபோது தமக்கிருந்த யாவற்றையும் துறந்துவிட்டு வந்தார் என்று இயேசு அர்த்தப்படுத்தியிருக்கலாம் (பிலி. 2:6, 7ஐக் காணவும்).[18] இதற்கு மறுபுறத்தில், கனத்திற்குரிய இடங்களில் யார் அமருவார்கள் என்பதைத் தேவன் முடிவு செய்வார் என்ற உண்மையின்மீது வலியுறுத்தம் இருப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக தேவன் கனத்திற்குரிய இடங்களை ஒரு குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த - குறிப்பாக, பிறருக்கு ஊழியம் செய்கின்ற (மத். 20:26, 27) - தனிநபர்களுக்கு ஆயத்தம் செய்துள்ளார் என்பதைச் சந்தர்ப்பப் பொருள் சுட்டிக்காண்பிக்கிறது.[19] ஆயினும், நாம் வரலாற்றில் முன்னோக்கிச் செல்லுகின்றோம்.

# *பன்னிரெண்டு சீஷர்கள்*
# *(மத். 20:24-28; மாற். 10:41-45)*

***சுயத்தின்மீது ஆர்வம்***

*யாக்கோபுவும் யோவானும், தங்களின் உரையாடலானது தங்களுக்கும் கர்த்தருக்கும் இடையில் மாத்திரம் இருக்கவேண்டும் என்று நோக்கம் கொண்டிருந்து இருக்கலாம், ஆனால் கிசுகிசுக்கப்பட்ட செய்தித் தொடர்புகள் வெளியரங்கமாவதற்கு ஒரு வழியைக் கொண்டுள்ளன. யாக்கோபுவும் யோவானும் செய்திருந்ததை மற்ற அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டபோது, அவர்கள் "அந்த இரண்டு சகோதரர்கள் பேரிலும் எரிச்சலானார்கள்" (மத். 20:24). ராஜ்யத்தில் யார் பெரியவராயிருப்பார் என்பது பற்றிப் பன்னிருவரும் தங்களுக்குள் தொடர்ந்து தர்க்கம் செய்து கொண்டிருந்தார்கள் (மாற். 9:34; மத். 18:1; லூக். 22:24ஐக் காணவும்).*

***சுயத்தை மறுத்தல்***

*இயேசு தம்மிடத்தில் சீஷர்களை வரவழைத்து, "புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ்செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்" என்று கூறினார் (மத். 20:25). உலகம் இப்படித்தான் இருக்கிறது. உலகப் பிரகாரமான நிறுவனங்கள் அதிகாரத்துவ மட்டங்கள் கொண்ட அதிகார அமைப்புக்களை அமைக்கின்றன - இவைகள் மேலிடத்தில் தலைவரைக் கொண்டு தொடங்கி கீழ்நிலைச் சிப்பந்தி வரை செல்லுகின்றன. சமூகத்தில் முக்கியமான மக்களே அதிகாரத்தைச் செயல்படுத்துகின்றனர் என்பது தெளிவு. இயேசுவின் நாட்களில், பேரரசர் தமது இராணுவத்தைக் கொண்டிருந்தார், ரோம ஆளுனர் தமது நீதிமன்றத்தைக் கொண்டிருந்தார், கிழக்கத்தியப் பிரபுக்கள் தங்கள் அடிமைகளைக் கொண்டிருந்தனர். இன்றைய நாட்களில் உலகமானது, தனிநபர்களின் முக்கியத்துவத்தை, அவர்கள் தங்களுக்காக அல்லது தங்களின்கீழ் வேலை செய்வதற்குக் கொண்டுள்ள மக்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மதிப்பிடுகிறது. கிறிஸ்து தமது சீஷர்களிடத்தில், "உங்களுக்குள்ளே அப்படியிருக்கலாகாது" என்று கூறினார் (மத். 20:26அ).*

*இயேசு, "உங்களுக்குள்ளே அப்படியிருக்கலாகாது" என்று கூறியபோது, ராஜ்யம்/சபை என்பது பணிவடிவமைப்புக்களைக் கொண்டிருக்கலாகாது என்றோ அல்லது நமக்கு ஆவிக்குரிய நடத்துவத்துவமென்பது தேவையில்லை என்றோ அவர் கூறவில்லை. நடத்துவத்துவம் இல்லாமல் எந்த ஒரு நிறுவனமும் செயல்திறத்துடன் பணியாற்ற இயலாது.[20] ஒவ்வொரு சபைக்கும் தகுதி வாய்ந்த மூப்பர்கள் தேவை (தீத்து 1:5). மாறாக கிறிஸ்து, ராஜ்யத்தின்/சபையின் நிறுவன அமைப்பானது உலகத்தின் மாதிரியின்படி இருக்கக் கூடாது என்றே கூறினார்.[21] மற்றும், ஆவிக்குரிய தலைவராயிருப்பதற்கான நோக்கமானது மாம்சத்திற்குரிய தலைவராயிருப்பதற்கான நோக்கத்திலிருந்து பிரம்மிக்கத்தக்க வகையில் மாறுபட்டு இருக்க வேண்டும்*

என்றும் அவர் கூறினார். "உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக் கடவன்" என்று அவர் கூறினார் (மத். 20:26ஆ).

''பணிவிடைக்காரன்'' என்ற வார்த்தையானது நமது காதுகளில் கடுமையானதாக இனியும் ஒலிக்காத அளவுக்கு நாம் இயேசுவின் போதனைகளில் நன்கு பரிச்சயப்பட்டு இருக்கின்றோம். நாம் இவ்வார்த்தையைப் புகையிட்டுத் தூய்மைப்படுத்தி இதற்கு பளபளப்பான வண்ணப்பூச்சைக் கொடுக்கின்றோம், அதன்மூலமாக இது பெருமையுடன் அணிந்துகொள்ளக் கூடியதாகிறது: ''அவர் [அல்லது அவள்] ஆண்டவரின் மாபெரும் ஊழியக்காரர்/ஊழியக்காரி." புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் இருந்த மக்கள், "ஊழியக்காரன்/ஊழியக்காரி" என்ற வார்த்தையில் மறைமுகமாய் அர்த்தம் கொண்டிருந்தது என்ன என்பதைப் புரிந்துகொண்டிருந்தனர்: ஒரு ஊழியக்காரன் அழுக்கான வேலையை, வேறு எவரும் செய்ய விரும்பாத வேலையைச் செய்தான். ஒரு ஊழியக்காரன் மதிக்கப்படவில்லை. ஒரு ஊழியன் தான் செய்ய வேண்டிய வேலையைச் செய்ததற்காக அங்கீகரிக்கப்படவோ, நன்றி செலுத்தப்படவோ இல்லை (லூக். 17:10). இருந்தபோதிலும் கிறிஸ்து, "உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக் கடவன்" என்று கூறினார்.

இயேசுவின் போதனை புரட்சிகரமானதற்குக் குறைவாக இருந்ததில்லை. உலகமானது ஊழியம் கொள்ளுதலை வலியுறுத்துகிறது, அதே வேளையில் கர்த்தர், பிறருக்கு ஊழியம் செய்வதை மேன்மைப் படுத்தினார். இங்கு, "உலகத்தின் தராதரத்தை முற்றிலும் திருப்பிப்போட்ட நிலையொன்று" இருந்தது.[22] கிறிஸ்து, "வாழ்விற்குள் ... முற்றிலும் புதியதான ஒரு மதிப்பீட்டை" கொண்டு வந்தார்.[23] நாம் மற்றவர்களை நம்மைக் காட்டிலும் "அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாய்" மதிக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார் (பிலி. 2:3).

இந்தக் கருத்தை இயேசுவின் சீஷர்கள் [புரிந்துகொள்ள] தவற விட்டிருக்கும் பட்சத்தில், அவர் தொடர்ந்து, "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன்" என்று கூறினார் (மத். 20:27). வசனம் 26ல், கிறிஸ்து "பணிவிடைக்காரன்" என்பதற்கு உரிய வார்த்தையை (diakonos) பயன்படுத்தினார்; இப்போது அவர் "அடிமை" என்பதற்குரிய வார்த்தையை (doulos) பயன்படுத்தினார். பணிவிடைக்காரனாக இருத்தல் என்பது மோசமானதாக இருந்தது; அடிமையாக இருத்தல் என்பது முடிவற்ற வகையில் மிக மோசமானதாக இருந்தது. அடிமையானவன் என்பவன் ஒரு உடைமையாக இருந்தான்! அடிமையானவனுக்கு எந்த உரிமையுமே இருந்ததில்லை! (தேவனுடைய ஊழியக்காரனாக இருத்தல் என்ற கருத்தை நாம் சிரமத்துடன் கையாள முடியும்; ஆனால், மற்ற மக்களுக்கு ஊழியக்காரனாக இருத்தல் என்பதைக் குறித்து உணர்வெழுச்சி அடைதல் என்பது கடினமாக உள்ளது.[24])

இயேசுவின் அப்போஸ்தலர்களுக்கான நடைமுறைப் பயன்பாடு

பின்வருமாறு இருந்தது: "நீங்கள் 'முதன்மையாக' இருக்க விரும்பினால், யார் முதன்மையானவர் என்ற விவாதத்தை நிறுத்துங்கள். கனத்திற்குரிய இடங்களைக் கேட்பதை நிறுத்துங்கள். மாறாக, ஒருவர் ஒருவருக்கும் - மற்றவர்களுக்கும் ஊழியம் செய்யத் தொடங்குங்கள்.'' அவரது வார்த்தைகள் நமக்கும் நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளது: ''எல்லா வேளையும் உங்களைப் பற்றியே நினைப்பதையும், நீங்கள் விரும்புவது என்ன என்பதை நினைப்பதையும் நிறுத்துங்கள். மற்றவர்களின் தேவைகளுக்கு உங்கள் கண்களைத் திறந்து, அவர்களுக்கு உதவி செய்யத் தொடங்குங்கள்."

சுயநலமற்ற தன்மை பற்றிய ஒரு பாடத்தை ஒரு இளம் பெண் கேள்விப்பட்டபோது, அவள் ஒரு அட்டையில், "ஆனால் சுயத்தை மறுத்தல் என்பது மனித தன்மை அல்ல!'' என்று எழுதினாள்.[25] அவள் சரியானவளாகவே இருந்தாள். சுயத்தை மறுத்தல் என்பது மனிதப் பண்பல்ல; அது ஒரு தெய்வீகப் பண்பாக உள்ளது. இயேசு தாமே செய்ய மனவிருப்பம் இல்லாத ஏதொன்றையும் சீஷர்களிடத்தில் - மற்றும் நம்மிடத்தில் - கேட்கவில்லை. தொடர்ந்து அவர், ''அப்படியே, மனுஷகுமாரனும்[26] ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், ... வந்தார்" என்று கூறினார் (மத். 20:28அ; லூக். 22:27ஐக் காணவும்). ஊழியம் கொள்வதற்குக் கர்த்தர் ஒரு தெய்வீக உரிமையைக் கொண்டிருந்தார், ஆனால் அவர் ஊழியம் செய்வதென்று ஒரு தெய்வீக முடிவை மேற்கொண்டார்.[27] கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிப் பேதுரு பின்னாளில் இவ்வாறு தொகுத்துரைத்தார்: "அவர் நன்மை செய்கிறவராய் ... சுற்றித் திரிந்தார்" (அப். 10:38). மக்களின் தேவைகளினால் அவர் எப்போதுமே தொடப்பட்டார். உதவி செய்வதற்கு அவர் எப்போதுமே தயாராக இருந்தார். அவர் ஒருக்காலும் மிகவும் களைப்படையவில்லை, மிகவும் வேறு வேலைகளைக் கொண்டிருந்ததில்லை, மிகவும் வேலை மும்முரமாக இருந்ததில்லை. ஊழியம் செய்வதற்கு அவர் எப்போதுமே தயாராக இருந்தார்.[28]

பின்பு இயேசு, ஊழியத்தில் தமது மாபெரும் செயலை, பிறருக்காகத் தமது வாழ்வைப் பலியாக்குதலைப் பற்றிப் பேசினார்: ''அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத். 20:28ஆ). கிறிஸ்து, தாம் பூமிக்கு வந்தது எதற்காக என்பதைப் பற்றி ஒன்றுக்கு மேற்பட்ட முறை பேசினார்: "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" (லூக். 5:32; மத். 9:13ஐக் காணவும்); "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" (லூக். 19:10). மத்தேயு 20:28ல், நோக்கக் கூற்றில் அவர், தாம் அந்த நோக்கத்தை நிறைவேற்றப் போவது எவ்வாறு என்று அவர் கூறினார்: அவர், "ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்."

''மீட்கும் பொருள்'' என்ற வார்த்தையானது, பிள்ளைகளைக் கடத்துதல் தொடர்பாக மிகவும் அடிக்கடி கேள்விப்படப் படுகிறது: "மீட்கும் பொருள்" என்பது, கடத்தல்காரர்கள் தங்களிடம் அகப்பட்டவர்

களை விடுவிப்பதற்கு முன்பு கோருகின்ற விலையாக உள்ளது. "மீட்கும் பொருள்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையில் (lutron) இப்படிப்பட்ட ஒரு கருத்து உள்ளடக்கப்பட்டுள்ளது, ஆனால் இவ் வார்த்தையின் அர்த்தம் அதைவிடப் பரந்ததாக உள்ளது. செப்துவஜிந்த்[29] மொழிபெயர்ப்பில் இவ்வார்த்தையானது ஒரு அடிமைக்கு விடுதலையைப் பெறுவதற்குச் செலுத்தப்படுகின்ற கிரயம் என்ற குறிப்பில், பணயக் கைதிகளின் அல்லது யுத்தத்தில் சிறைப்பிடிக்கப்பட்டவர்களின் அல்லது வேறு ஏதாவது ஒரு வகையில் பிடிக்கப்பட்டவர்களின்[30] விடுதலையைப் பெறுவதற்குத் தேவைப்படும் தொகை என்ற குறிப்பில், பயன்படுத்தப் பட்டுள்ளது. நாம், மீட்கும் பொருள் என்பதற்கு "தொகையை செலுத்தி விடுவித்தல்" என்பது அடிப்படையான அர்த்தம் என்று சுருக்கிக்கூற முடியும்.[31]

புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தையானது, நம்மைப் பாவத்தின் குற்றத்திலிருந்து விடுவிக்கச் செலுத்தப்படும் கிரயம் என்பதைக் குறிப்பிடத் தனிப்பட்ட வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. Lutron என்ற வார்த்தை மத்தேயு 20:28 மற்றும் மாற்கு 10:45 ஆகிய வசனங்களில் மாத்திரம் காணப்படுகிறது, ஆனால் இதனுடன் தொடர்புடைய வார்த்தைகள் நமது இரட்சிப்பைப் பற்றிய மற்ற வசனப்பகுதிகளில் பயன்படுத்தப் பட்டுள்ளன,[32] இவற்றில் 1 தீமோத்தேயு 2:5, 6ல் உள்ள மாபெரும் வேத வசனப்பகுதியும் உள்ளடங்குகிறது: "... தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே ... ."[33]

மனிதர்கள், மத்தேயு 20:28ஐச் சிக்கலாக்க முயற்சி செய்துள்ளனர், எவ்வாறெனில், இவ்வசனம் "அநேகரை மீட்கும் பொருளாக" என்று கூறியிருக்கையில், 1 தீமோத்தேயு 2:6ல் "எல்லாரையும் மீட்கும் பொருளாக" என்றுள்ளது என்பதாகக் கூறுகின்றனர் - ஆனால் மத்தேயு 20:28ல் உள்ள "அநேகர்" என்ற வார்த்தையானது "எல்லாரையும்" என்பதைக் குறிப்பிடும் எபிரெயச் சொல்வழக்காக உள்ளது.[34] மீண்டுமாக, இந்த மீட்கும் பொருள் தேவனுக்கா அல்லது சாத்தானுக்கா யாருக்குச் செலுத்தப்பட்டது என்பது பற்றி மனிதர்கள் வாக்குவாதம் செய்துள்ளனர். இப்படிப்பட்ட ஒரு யூகமானது இவ்வேதவசனப் பகுதியின் நோக்கப் பரப்பிற்குப் புறம்பே உள்ளது. "என்றென்றும் முற்பாதுகாப்புடன் இருத்தல் என்பது சுயாதீனத் தின் விலையாக உள்ளது"[35] என்று நாம் கூறும்போது, இந்த விலையை யாருக்குச் செலுத்த வேண்டும் என்று நாம் கேட்பதில்லை.

மத்தேயு 20:28 வசனமானது, மனிதர்களைத் தேவனிடத்திற்குத் திரும்பக் கொண்டு வருவதற்கு இயேசு கிறிஸ்துவின் மரணம் விலைக் கிரயமாயிற்று என்ற மாபெரும் சத்தியத்தை எளிமையாக அறிவிக்கிறது.[36] இதைப் பேதுரு பின்வருமாறு கூறினார்: "... அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்,[37] குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தி னாலே மீட்கப்பட்டீர்கள்" (1 பேது. 1:18, 19). பவுல், "கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய

*உங்கள் சரீரத்தினாலும் ... தேவனை மகிமைப்படுத்துங்கள்'' என்று எழுதினார் (1 கொரி. 6:20).*

*முதலாமவராக இருப்பதற்கு, ஒருவர் ஊழியக்காரராக இருக்க வேண்டும் என்று இயேசு எடுத்துரைத்திருந்தார். அவர் மாபெரும் ஊழியத்தை நிறைவேற்றியதால், தாமே முதலாமவராக இருக்கின்றார். கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார் (1 கொரி. 15:3)!*

## *எல்லா சீஷர்கள்*

**சுயத்தின்மீது ஆர்வம்**

*நாம் இந்தப் பாடத்தை முடிக்கும் முன்பு, இயேசுவின் பாடங்களை நமக்கு நடைமுறைப்படுத்தச் சற்றே அதிகமான வேளைகளைச் செலவிடுவோம். ராஜ்யம்/சபை ஸ்தாபிக்கப்பட்டபோது கிறிஸ்துவின் சீஷர்களின் மத்தியில் மாம்சத்திற்குரிய பேரார்வங்கள் இந்தப் பூமியிலிருந்தே என்றென்றைக்குமாக ஒழிந்துபோயின என்று என்னால் கூறமுடிய வேண்டும் என்று விரும்புகின்றேன். துரதிர்ஷ்டவசமாக, "கடந்து செல்லும் உலகத்தின் உலகப்பிரகாரமான காற்றைத் தொடர்ந்து நமது பூமிக்குரிய யாத்திரையில் சுவாசிக்கின்ற நாம் ... அது தொற்றிக்கொள்ளாமல் தவிர்த்தல் என்பது கடினமாக உள்ளது."[38] சமுதாயத்தின் கொள்கையானது, "முதலாம் இடத்தில் இருக்க கண்ணோக்குங்கள்" என்பதாகவே நிலைத்துள்ளது.[39] சுயமையத் தன்மையானது சபையில் தொற்றிக் கொள்ளக்கூடும்: சில வேளைகளில் சபைகள் வெற்றி மற்றும் அளவு என்ற நோய்க்குறி பீடிக்கப்பட்டு ஊழியம் செய்தல் என்பதை கிறிஸ்தவத்தின் இருதயம் போன்ற மையப் பகுதியாக உள்ளது என்பதை மறந்து விடுகின்றன. சுய ஆர்வம் என்பது தனித்தனிக் கிறிஸ்தவர்களையும்கூட தொற்றிக்கொள்ளக் கூடும்: மிகப் பெரிய சபைகளில் பிரசங்கிப்பதற்கான போட்டி அடிக்கடி நிலவுகிறது. மூப்பர் என்ற பணிநிலை தங்களுக்கு அளிக்கும் அதிகாரங்களைக் கற்பனையாக யூகித்துக் கொண்டு, அந்த இடத்தைப் பெறுவதற்கு மனிதர்கள் இச்சிக்கின்றனர். நம்மில் பலர் (நாம் ஒப்புக்கொள்ள மனமுள்ளவர்களாய் இருந்தால்) நாம் செய்கின்ற நன்மைகளுக்கு அங்கீகாரத்தையோ அல்லது பாராட்டுதலையோ பெறாவிட்டால் மனம் புண்படுகின்றோம். "ஊழியன்" என்ற வார்த்தைக்கு நாம் உதடுகளால் மாத்திரமே வணக்கம் செலுத்துகின்றோம், ஆனால் ஒரு ஊழியக்காரனின் அற்பமான நிலையை நாம் விரும்புவதில்லை - நிச்சயமாகவே நாம் "அடிமைகளாக" இருக்க விரும்புவதில்லை.*

**சுயத்தை மறுத்தல்**

*இருந்தபோதிலும், இன்னமும் இயேசு, ''உங்களில் எவனாவது பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக் கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்*

கடவன்" என்று கூறுகின்றார் (மத். 20:26, 27). அடிமைகளாய் இருத்தல் என்பது, யாக்கோபுவும் யோவானும் அரியணைகளுக்கான தங்கள் வேண்டு கோளை முன்வைத்தபோது அவர்களின் சிந்தைகளில் கொண்டிருந்த கருத்திற்கு நேர் எதிரானதாக உள்ளது. அப்படிப்பட்ட இடங்கள், சுயநலமற்ற மற்றும் சுயத்தைத் தியாகம் செய்த வகையிலான ஊழியத்தைச் செய்தவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்தேயு 20:26, 27 வசனங்கள் கூறுகின்றன என்றே நான் நம்புகின்றேன். கிறிஸ்துவின் வலது புறமும் இடது புறமும் உள்ள அரியணைகள், யாக்கோபு, யோவான் அல்லது பேதுரு, பவுல் போன்ற வேதாகமத்தின் மாபெரும் பாத்திரங்களுக்கு ஒதுக்கப்படாது, ஆனால் தங்கள் வாழ்வைப் பரவலாக அறியப்படாத வகையில் செலவிட்டு, (மக்களால்) பாராட்டப்படாத மற்றும் அங்கீகரிக்கப்படாத ஊழியத்தை நிறைவேற்றுகின்ற தாழ்மையான பரிசுத்தவான்களுக்கே அவ்விடங்கள் ஒதுக்கப்படும்.

## முடிவுரை

நீங்கள் வளரும்போது என்னவாகப் போகின்றீர்கள்? "நீங்கள் ஆவிக்குரிய முறையில் வளர்ந்தவர்களாயிருக்க முயற்சி செய்கின்றீர்களா?" என்பதே முதல் கேள்வியாக உள்ளது. சிலர் ஆவிக்குரிய வகையில் பிள்ளை களாயிருப்பதிலேயே திருப்தியடைந்திருப்பதாகக் காணப்படுகிறது (எபி. 5:12-14). "ஒரு ஊழியக்காரர் ஆவது என்பதை உங்கள் இலக்காக ஏற்படுத்தி யிருக்கின்றீர்களா?" என்பதே இரண்டாம் கேள்வியாக உள்ளது. இயேசுவைப் போலவே நாம் ஒவ்வொருவரும் ஊழியக்காரராக வேண்டும் என்பது நமக்கு முன்பாக உள்ள அறைகூவலாக உள்ளது: அவருடைய சிந்தையைக் கொண்டிருத்தல் (பிலி. 2:5), "அவருடைய அடிச்சுவடுகளில் பின்பற்றிச் செல்லுதல்" (1 பேது. 2:21), மற்றும் "அவருடைய சாயலுக்கு ஒப்பாயிருத்தல்" (ரோமர் 8:29). "தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லா வற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்க" நம் எல்லாருக்கும் தேவன்தாமே உதவுவாராக (எபே. 4:15)![40]

---

குறிப்புகள்

[1]நீங்கள் வாழும் இடத்திற்குத் தக்கவாறு இதைத் தழுவியமைத்துக் கொள்ளவும். உங்கள் எடுத்துரைப்பின் ஒரு பகுதியாக, நீங்கள் பல பிள்ளைகளிடத்தில், அவர்கள் வளரும்போது என்னவாக விரும்புகின்றனர் என்று கேட்க விரும்பலாம். [2]ஆவிக்குரிய வளர்ச்சியின் அவசியத்தைப் பற்றிப் புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது (எபே. 4:15; 1 பேது. 2:2; 3:18). ஆவிக்குரிய வகையில் "வளர்ந்து" இருத்தல் என்பது "பக்குவம்" என்று அழைக்கப்படுகிறது (1 கொரி. 14:20; எபே. 4:13 ஆகிய வசனங்களைக் காணவும்). [3]பெரும்பாலான பிள்ளைகள் இதைத் தங்கள் பெற்றோர்களிடம் குறைந்தது ஒருமுறையாவது முயற்சி செய்கின்றனர். இந்த நிகழ்வு பற்றிய ஒரு சொந்த அனுபவத்தை எடுத்துரைக்க நீங்கள் விரும்பலாம். [4]மத்தேயு 19:28 பற்றிய சுருக்கமான கலந்துரையாடலைக் காணவும். [5]அவர்கள்

*கேட்டதை இயேசு அவர்களுக்குக் கொடுத்திருந்தால், அவர்கள் அநேகமாக, விரைவிலேயே அதிக முக்கியத்துவம் வாய்ந்த அரியணையைப் பெறுவது யார் என்று தங்களுக்குள் சண்டையிட்டிருப்பார்கள்.* [6]James Burton Coffman, *Commentary on Mark* (Austin, Tex.: Firm Foundation Pubishing House, 1975), 217. I first heard J. W. Roberts use this analogy in the 1950's. [7]James Burton Coffman, *Commentary on the Gospel of Matthew* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1968), 312. *இந்த ஒப்புவமையை நீங்கள் வாழ்கின்ற நாட்டில் உள்ள அரசியல் ரீதியான அதிக முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு பதவிகளைக் கொண்டு தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.* [8]Dale Hartman, sermon preached at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 2000. [9]*நிகழ்ச்சிகள் நடந்த சரியான வரிசைமுறைமை - மகன்கள் முதலில் கேட்டார்களா அல்லது தாயார் முதலில் கேட்டாரா என்பது - பற்றி நாம் அறிவதில்லை. யாக்கோபுவும் யோவானும் தங்கள் தாயார் மூலமாகக் கேட்டிருக்கவும் கூட வாய்ப்பு உள்ளது.* [10]*அவளும் மற்ற பெண்களும், கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் தேவைகளை நிறைவேற்றியவாறு, கலிலேயாவில் இயேசுவுடன் பயணம் செய்திருந்தார்கள் (மாற். 15:40, 41), ஆனால் இது, விட்டுவிட்டு நிகழ்ந்திருக்க வேண்டும். அவள் இயேசுவின் உரையைத் தொடர்ந்து கேட்பதற்குத் தனது மகன்களைப் போல் வாய்ப்புப் பெற்றிருந்தது இல்லை; அவள், இவர்கள் பெற்றுக்கொண்டது போல் தனிப்பட்ட சிறப்புப் போதனையெதையும் பெற்றிருந்தது இல்லை.*

[11]*மற்ற அப்போஸ்தலர்கள் திருமதி. செபதேயுவின் மீதல்ல ஆனால் அவளது மகன்கள்மீதுதான் எரிச்சலானார்கள் என்பதைக் கவனியுங்கள் (மத். 20:24; மாற். 10:41).* [12]*உங்கள் வகுப்பிற்குத் தகுதியாயிருக்குமென்றால், நீங்கள் பின்வரும் கூற்றையும் கூட்டிக்கொள்ளலாம்: "பெருக்கெடுத்தோடும் மகிழ்ச்சியும் பேரழிவுக்கு உட்படுத்தும் பாடுகளும் தேவனுடைய கரத்தினால்'' இயேசு சிலுவையில் மரித்தபோது பாவத்திற்காக நமக்குக் கிடைக்க வேண்டிய தண்டனையை, அவர்தாமே தம்மீது மேற்கொண்டார். நமது பாவங்கள் அவரைத் தேவனிடத் திலிருந்து பிரிந்த நிலையில் இருக்கச் செய்தது என்பது அந்தப் பாடுகளின் உச்சக் கட்டமாக இருந்தது.* [13]*இயேசு குடிக்க வேண்டியிருந்த ''பாத்திரம்'' என்பதில் உள்ளடங்கியிருந்தது என்ன என்பது பற்றி அதிகமான கருத்துக்களுக்கு "கிறிஸ்துவின் வாழ்வு, 6" என்ற புத்தகத்தில் "யூதேயாவில் தூக்கமின்மை" மற்றும் "தோட்டத்தில்" என்ற பாடங்களைக் காணவும்.* [14]*இந்தக் கற்பிதத்தை இயேசு இதற்கு முன்னதாக, லூக்கா 12:50ல் பயன்படுத்தியிருந்தார் ("கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் காணவும்). தண்ணீரினால் மூழ்கடிக்கப்பட்டிருத்தல் பற்றிய பழைய ஏற்பாட்டு உருவகம் ஒன்று இவ்விடத்தில் இணையானதாக இருக்கலாம் (இது தெய்வீகத்தினால் தரப்படும் தண்டனை பற்றிய குறிப்பாக உள்ளது; சங். 42:7; 69:15; 124:4ஐக் காணவும்).* [15]*மேசியா தமது ராஜ்யத்தை அமைத்தவுடன், முதலில் அவர் வெறுப்புக்குரிய ரோமர்களைத் தோற்கடிப்பார் என்று யூதர்கள் நினைத்தனர்.* [16]*அவர்கள் ''இடிமுழுக்கத்தின் மக்களாக'' இருந்தார்களே (மாற். 3:17). இருந்தபோதிலும், நாம் காணப்போகிறபடி, அபாயத்தின் முதல் அறிகுறியின்போது, அவர்கள் மற்ற அப்போஸ்தலர்களுடன் சேர்ந்து ஓடிப்போனார்கள்.* [17]*நாம், மத்தேயு 26:33, 35ல் பேதுருவின் தயார் நிலைப் பதில்களைக் கொண்டு நினைவூட்டப்படுகின்றோம்.* [18]*இயேசு துறந்திருந்த தெய்வீக முன்னுரிமையின் ஒரு உதாரணத்திற்கு மாற்கு 13:32ஐக் காணவும்.* [19]*இயேசு, பாத்திரத்தில் குடித்து துன்பத்தின் ஸ்நானத்தைச் சகித்தபோது, நேரடியான அர்த்தத்தில் தமது வலது புறத்திலும் இடது புறத்திலும் இருப்பவர்களை - அதாவது இரண்டு கள்வர்களை-ப் பற்றிக் குறிப்பிட்டார் என்பதற்கான இன்னொரு சாத்தியக்கூறு உள்ளது.* [20]*இதை நீங்கள் லௌகீக உலகிலிருந்து ஒரு உதாரணத்துடன் விவரிக்க விரும்பலாம்.*

[21]நாமகரணக்கூட்டங்கள், இவ்வுலகத்தின் அதிகாரத்துவ அமைப்பின் அடிப்படையில் தங்களுக்கு அதிகார அமைப்பை ஏற்படுத்தி வைத்துள்ளன: பூமிக்குரிய ஒரு தலைவரும் அவரின் கீழ் அதிகாரத்துவத்தின் பல மட்டங்களும் அவற்றில் உள்ளன. இப்படிப்பட்ட ஒரு நிறுவன அமைப்பானது வேதவாக்கியங்களுக்கு அந்நியமானதாக உள்ளது. [22]William Barclay, *The Gospel of Matthew,* vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 232. [23]Ibid. [24]தேவனுடைய அடிமைகளாயிருத்தல் பற்றி, 1 கொரிந்தியர் 7:22ல் காணவும்; மனிதர்களுக்கு அடிமைகளாயிருத்தல் பற்றி 1 கொரிந்தியர் 9:19ல் காணவும். [25]Allison Martin, "But, Denying Self Is Not Human!" *Power for Today* (April-June 2001): 42. [26]மத்தேயு 20:28ல் இயேசு, மேசியாத்துவம் பற்றிய பழைய ஏற்பாட்டின் மாபெரும் இரண்டு கருத்துக்களை ஒன்றிணைத்தார் என்று விளக்கவுரையாளர்கள் பொதுவாகக் குறிப்பிடுகின்றனர்: தானியேல் 7ன் "மனுஷ குமாரன்" என்ற சொல்லாக்கம் மற்றும் ஏசாயா 52; 53 ஆகியவற்றில் இருந்து பாடுபடும் ஊழியக்காரர் பற்றிய கருத்து. [27]This sentence was adapted from D. Stuart Briscoe, *Expository Nuggets from the Gospels* (Grand Rapids, Mich.: Baker Books, 1994), 141. [28]நீங்கள் ஊழியத்தைப் பற்றி இயேசுவின் வாழ்வில் இருந்து உதாரணங்களைத் தர விரும்பலாம். [29]செப்துவஜிந் என்பது பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பாக உள்ளது. [30]எடுத்துக்காட்டாக, "மீட்கும் பொருள்" என்பது வரியைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது (யாத். 30:12), இது ஒரு மனிதனின் எருது இன்னொருவனைக் கொன்றதென்றால், இம்மனிதனின் உயிரை மீட்பதற்கான பணத்தைக் குறிப்பிட்டது (யாத். 21:29, 30), முதற்பேற்றை மீட்பதற்கு கொடுக்கப்பட்ட விலையைக் குறிப்பிட்டது (எண். 18:15), மற்றும் இது அடிமைப்படுத்தப்பட்ட ஒரு உறவினனை வாங்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட பணத்தையும் குறிப்பிட்டது (லேவி. 25:51, 52).

[31]See Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 545. [32]இவ்வார்த்தையின் வடிவங்கள் ரோமர் 3:24, எபேசியர் 1:7 மற்றும் எபிரெயர் 9:12 ஆகியவற்றில் உள்ளன. [33]மத்தேயு 20:28 மற்றும் 1 தீமோத்தேயு 2:6 ஆகியவற்றிற்கு இடையில் ஒற்றுமைகள் உள்ளன: மத்தேயு 20:28 வசனமானது lutron anti ("பதிலாக மீட்கும் பொருள்'') என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது, அதே வேளையில் 1 தீமோத்தேயு 2:6 வசனமானது, antilutron என்ற கூட்டுவார்த்தையைப் பயன்படுத்துகிறது. [34]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 1, The Living Word Commentary Series, ed. Everett Ferguson (Abilene, Tex.: ACU Press, 1976), 81. [35]இந்தப் பிரபலமான கூற்றானது அயர்லாந்து நாட்டின் டப்ளின் நகரில் 10 ஜூலை 1790ல் ஜான் பில்பாட் கியூரன் அவர்களால் நிகழ்த்தப்பட்ட ஒரு உரையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது என்பது உறுதி. [36]Barclay, 235. [37]"மீட்கப்பட்டு" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது lutron என்பது போன்ற வார்த்தைக் குடும்பமாகவே உள்ளது. [38]Joost De Blank, *Uncomfortable Words* (London: Longmans, Green and Co., 1958), 54. [39]"முதலிடம்" என்பது ஒருவரைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் சொல் விளக்கமாக உள்ளது. [40]நீங்கள் இந்த எடுத்துரைப்பை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், வளரத் தவறியுள்ள கிறிஸ்தவர்கள் ஜெபங்களைக் கேட்கும்படி உற்சாகப்படுத்த நீங்கள் விரும்பலாம் (யாக். 5:16). மேலும் நீங்கள், ஞானஸ்நானம் பெறத் தேவையாக இருக்கின்றவர்கள் உட்பட பதில்செயல் செய்ய தேவையான எவரொருவரையும் உள்ளடக்கி அழைத்தலை விரிவாக்கவும் விரும்பலாம் (மாற். 16:15, 16; அப். 2:38).